ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச்செய்த

# திருப்பள்ளியெழுச்சி

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திருப்பள்ளியெழுச்சி

## தனியன்கள்

**தமேவமத்வா பரவாஸுதே$_3$வம்**
**ரங்கே$_3$ஶயம் ராஜவத$_3$ர்ஹணீயம் |**
**ப்ராபோ$_3$த$_4$கீம் யோऽக்ரு'த ஸூக்திமாலாம்**
**ப$_4$க்தாங்க்$_4$ரிரேணும் ப$_4$க$_3$வந்தமீடே$_3$ ||**

மண்டங்குடியென்பர் மாமறையோர் மன்னியசீர்த் ⋆
தொண்டரடிப்பொடி தொன்னகரம் ⋆
வண்டு திணர்த்தவயல் தென்னரங்கத்தம்மானைப் ⋆
பள்ளி உணர்த்தும் பிரானுதித்த வூர்

‡ கதிரவன் குணதிசைச் சிகரம் வந்தணைந்தான் ⋆
கனை இருள் அகன்றது காலையம் பொழுதாய் ⋆
மது விரிந்தொழுகின மாமலர் எல்லாம் ⋆
வானவர் அரசர்கள் வந்து வந்தீண்டி ⋆
எதிர்திசை நிறைந்தனர் இவரொடும் புகுந்த ⋆
இருங்களிற்றீட்டமும் பிடியொடு முரசும் ⋆
அதிர்தலில் அலை கடல் போன்றுளதெங்கும் ⋆
அரங்கத்தம்மா ! பள்ளி எழுந்தருளாயே || **1** ||

கொழுங்கொடி முல்லையின் கொழு மலரணவிக் ⋆
கூர்ந்தது குண திசை மாருதம் இதுவோ ⋆
எழுந்தன மலர் அணைப் பள்ளிகொண்டன்னம் ⋆

ஈன் பனி நனைந்த தம் இருஞ்சிறகுதறி ⋆
விழுங்கிய முதலையின் பிலம் புரை பேழ்வாய் ⋆
வெள்ளெயிறுற அதன் விடத்தினுக்கனுங்கி ⋆
அழுங்கிய ஆனையின் அருந்துயர் கெடுத்த ⋆
அரங்கத்தம்மா ! பள்ளி எழுந்தருளாயே ‖ **2** ‖

சுடர் ஒளி பரந்தன சூழ் திசை எல்லாம் ⋆
துன்னிய தாரகை மின்னொளி சுருங்கிப் ⋆
படர் ஒளி பசுத்தனன் பனி மதி இவனோ ⋆
பாயிருள் அகன்றது பைம் பொழிற் கமுகின் ⋆
மடலிடைக் கீறி வண் பாளைகள் நாற ⋆
வைகறை கூர்ந்தது மாருதம் இதுவோ ⋆
அடல் ஒளி திகழ் தரு திகிரியந் தடக்கை ⋆
அரங்கத்தம்மா ! பள்ளி எழுந்தருளாயே ‖ **3** ‖

மேட்டிள மேதிகள் தளைவிடும் ஆயர்கள் ⋆
வேய்ங்குழல் ஓசையும் விடை மணிக் குரலும் ⋆
ஈட்டிய இசை திசை பரந்தன வயலுள் ⋆
இரிந்தன சுரும்பினம் இலங்கையர் குலத்தை ⋆
வாட்டிய வரிசிலை வானவரேறே ! ⋆
மா முனி வேள்வியைக் காத்து ⋆
அவபிரதம் ஆட்டிய அடு திறல் அயோத்தி எம் அரசே ! ⋆
அரங்கத்தம்மா ! பள்ளி எழுந்தருளாயே ‖ **4** ‖

புலம்பின புட்களும் பூம் பொழில்களின் வாய் ⋆
போயிற்றுக் கங்குல் புகுந்தது புலரி ⋆
கலந்தது குணதிசைக் கனை கடல் அரவம் ⋆
களி வண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த ⋆

அலங்கலந் தொடையல் கொண்டடியிணை பணிவான் ⋆
அமரர்கள் புகுந்தனர் ஆதலில் அம்மா ⋆
இலங்கையர் கோன் வழிபாடு செய் கோயில் ⋆
எம்பெருமான் ! பள்ளி எழுந்தருளாயே ‖ **5** ‖

இரவியர் மணி நெடும் தேரொடும் இவரோ ⋆
இறையவர் பதினொரு விடையரும் இவரோ ⋆
மருவிய மயிலினன் அறுமுகன் இவனோ ⋆
மருதரும் வசுக்களும் வந்து வந்தீண்டி ⋆
புரவியோடாடலும் பாடலும் தேரும் ⋆
குமர தண்டம் புகுந்தீண்டிய வெள்ளம் ⋆
அருவரை அனையநின் கோயில் முன் இவரோ ⋆
அரங்கத்தம்மா ! பள்ளி எழுந்தருளாயே ‖ **6** ‖

அந்தரத்தமரர்கள் கூட்டங்கள் இவையோ ⋆
அருந்தவ முனிவரும் மருதரும் இவரோ ⋆
இந்திரன் ஆனையும் தானும் வந்திவனோ ⋆
எம்பெருமான் உன் கோயிலின் வாசல் ⋆
சுந்தரர் நெருக்க விச்சாதரர் நூக்க ⋆
இயக்கரும் மயங்கினர் திருவடித் தொழுவான் ⋆
அந்தரம் பாரிடம் இல்லை மற்றிதுவோ ⋆
அரங்கத்தம்மா ! பள்ளி எழுந்தருளாயே ‖ **7** ‖

வம்பவிழ் வானவர் வாயுறை வழங்க ⋆
மாநிதி கபிலை ஒண் கண்ணாடி முதலா ⋆
எம்பெருமான் படிமக்கலம் காண்டற்கு ⋆
ஏற்பன வாயின கொண்டு நன் முனிவர் ⋆
தும்புரு நாரதர் புகுந்தனர் இவரோ ⋆

தோன்றினன் இரவியும் துலங்கொளி பரப்பி ⋆
அம்பர தலத்தில் நின்றகல்கின்றதிருள் போய் ⋆
அரங்கத்தம்மா ! பள்ளி எழுந்தருளாயே ॥ **8** ॥

‡ ஏதமில் தண்ணுமை எக்கம் மத்தளி ⋆
யாழ் குழல் முழவமோடிசை திசை கெழுமி ⋆
கீதங்கள் பாடினர் கின்னரர் கெருடர்கள் ⋆
கந்தருவர் அவர் கங்குலுள் எல்லாம் ⋆
மாதவர் வானவர் சாரணர் இயக்கர் ⋆
சித்தரும் மயங்கினர் திருவடித் தொழுவான் ⋆
ஆதலில் அவர்க்கு நாள் ஓலக்கம் அருள ⋆
அரங்கத்தம்மா ! பள்ளி எழுந்தருளாயே ॥ **9** ॥

‡ கடி மலர்க் கமலங்கள் மலர்ந்தன இவையோ ⋆
கதிரவன் கனை கடல் முளைத்தனன் இவனோ ⋆
துடியிடையார் சுரி குழல் பிழிந்துதறித் ⋆
துகில் உடுத்தேறினர் சூழ் புனல் அரங்கா ⋆
தொடை ஒத்த துளவமும் கூடையும் பொலிந்து ⋆
தோன்றிய தோள் தொண்டர் அடிப்பொடி என்னும் அடியனை ⋆
அளியன் என்றருளி உன் அடியார்க்காட்படுத்தாய் ! ⋆
பள்ளி எழுந்தருளாயே ! ॥ **10** ॥

அடிவரவு — கதிர் கொழு சுடர் மேட்டு புலம்பின இரவியர் அந்தரம் வம்பவிழ் ஏதம் கடி அமலன்

திருப்பள்ளியெழுச்சி முற்றிற்று

தொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகளே சரணம்